**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.125/2011**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுன் மாதம் 19 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குருநாத் | மதம் | : இந்து |
| த/பெ | : கிருஷ்ணமூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 47 | கிராமம் | : பொன்பாடி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**19.06.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கை வாதி சதாசிவம் எதற்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளார். புல எண்.202ல் 6, 7 சொத்துக்களை யாரிடம் எந்த தேதியில் வாங்கினோம் என்றால் அருணா என்பவரிடம் 28ம் தேதி மார்ச் மாதம் 2007ல் இருவரும் சேர்ந்து நிறுவனத்திற்காக வாங்கினோம். நாங்கள் வாங்கிய கிரைய ஆவணத்தில் நிறுவனத்திற்காக வாங்கியதாக எழுதப்பட்டுள்ளதா அல்லது தனிப்பட்ட முறையில் வாங்கியதாக உள்ளதா என்றால் **(சாட்சியிடம் வா.சா.ஆ 1 ஆவணம் காட்டப்பட்டது)** நான் பணம் கொடுத்து நிறுவனத்திற்காக ஒப்பந்ததத்தின் பேரில் இருவருக்காக வாங்கினோம்.

2. வா.சா.ஆ 1 ஆவணத்தில் நிறுவனத்திற்காக வாங்கியதாக எழுதப்பட்டுள்ளதா அல்லது தனிப்பட்ட முறையில் வாங்கியதாக உள்ளதா என்றால் தனிப்பட்ட முறையில் வாங்கியதாகதான் உள்ளது. ஆனால் பணம் வாதி கொடுக்கவில்லை. வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தின்படி தாவா சொத்தை காலியிடமாகதான் காட்டி வாங்கப்பட்டுள்ளது என்றால் வாங்கிய தேதியில் காலியிடம் தான். அதன் பின்பு அனுமதி பெற்று நான் கட்டிடம் கட்டியுள்ளேன்.

ஒப்பந்தத்தில் இருவரும் சேர்ந்து கட்டிடம் கட்ட வேண்டும் என உள்ளது. ஆனால் வாதி பணம் கொடுக்கவில்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தில் நான் மட்டும் தனித்து பணம் கொடுத்ததாக சரத்து உள்ளதா என்றால் இல்லை. ஆனால் முழு தொகையும் நான்தான் கொடுத்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி எனக்கு 03.05.2011ல் வழக்கறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 2தான் அந்த அறிவிப்பா என்றால் ஆமாம்.

3. வா.சா.ஆ 3 அஞ்சல் ஒப்புதல் அட்டையில் உள்ளது எனது கையெழுத்தா என்றால் என் அப்பா கையெழுத்து ஆகும். அந்த வழக்கறிவிப்பிற்கு இன்றுவரை நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ஆவணம்தான் பங்குதாரர் ஆவணம் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ 1 ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 07.08.2007ல் எழுதப்பட்டது. பி.வா.சா.ஆ 1 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்றால் ஆமாம். காஞ்சிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. பி.வா.சா.ஆ 1 பதிவு செய்யப்பட்டதற்கான ஏதேனும் குறியீடு உள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன்.

4. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் தொழில் கூட்டு பதிவு அறிவிப்பு என்று உள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ 1 கூட்டாண்மை ஒப்பந்தம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ஆவணம் காஞ்சிபுரம் கூட்டுறவு சங்கங்கள் பதிவின் கீழ் மாவட்ட பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ஆவணத்தின் 2ம் பக்கத்தில் 2ம் பத்தியில் 01.03.2007ம் தேதியிட்டு வியாபாரம் தொடங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக கூட்டாண்மை ஒப்பந்தம் இருக்கும் பட்சத்தில் பி.வா.சா.ஆ 2ஐ பதிவு செய்யும்போது மாவட்ட பதிவாளரிடம் காட்டியிருந்தால் அவர் பி.வா.சா.ஆ 1ல் எதிர் கையொப்பம் (Counter sign) செய்திருப்பார் என்றால் சரிதான். ஆனால் பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் அவ்வாறு மாவட்ட பதிவாளரின் எதிர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் வழக்கு சொத்து எங்காவது

காட்டப்பட்டுள்ளதா என்றால் 2ம் பக்கத்தில் 3வது வரியில் 80 செண்ட் நிலத்தை முருகம்பட்டில் வாங்கப்போவதாக எழுதப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் வழக்கு சொத்தின் புல எண் உள்ளதா என்றால் புல எண் இல்லை. ஆனால் முருகம்பட்டு 80 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த இடத்திற்கான வரி ரசீது பெற்று கதவு எண்ணை பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளோம். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் பக்கம் 3ல் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தலா ரூ.4 1/2 லட்சம் முதலீடு செய்து வியாபாரம் செய்ய போவதாக குறிப்பிட்டுள்ளோம். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தின் படி நான் நிர்வாக பங்குதாரர் (Managing partner) அல்லது துயில் பங்குதாரர் (sleeping partner) என்றால் நான் நிர்வாக பங்குதாரர் ஆவேன். வாதி துயில் பங்குதாரர் (sleeping partner) ஆவார்.

6. பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானதா என்றால் ஆமாம். அது நிறுவனத்திற்கு மின் இணைப்பு பெற வாங்கப்பட்ட ஆட்சேபணை இல்லா சான்றாகும். பி.வா.சா.ஆ 3லும் வாதி மற்றும் எனக்கு சொந்தம் என காட்டப்பட்டுள்ளது என்றால் சதாசிவம், குருநாத் மருவத்தூர் ஆதிபராசக்தி நிறுவனம் சொந்தம் என குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சொத்திற்கு தெற்கே புல எண்.202/8 உள்ளது என்றால் புல எண்.202/8A என்று தற்போது உள்ளது. புல எண்.202/8ல் ஏற்கனவே SKR சிமெண்ட் கம்பெனி நடந்து வந்தது என்றால் தற்போது அங்கு அந்த நிறுவனம் உள்ளது. அந்த இடம் வாங்கும்போது இல்லை. புல எண்.202/8ஐ யார் வாங்கினார்கள் என்றால் நானும் சதாசிவமும் MOU செய்து மருவத்தூர் ஆதிபராசக்தி நிறுவனம் என்ற பெயரில் நடத்துவதாக முடிவெடுத்து புல எண்.202/6, புல எண்.202/7ஐ வாங்கினோம். புல எண்.202/8ஐ ஜூன் 2009ல் என் அப்பா வாங்கினார்.

7. என்னிடம் காட்டப்படுவதுதான் புல எண்.202/8ல் என் அப்பா வாங்கிய கிரைய ஆவணம் என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் கிரைய ஆவணம் இணையவழி நகல் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** SKR PACK Tech Private Limited என்ற நிறுவனத்தில் இன்றைய தேதி வரை சிமெண்ட்

உற்பத்தி நடந்து வருகிறது என்றால் ஆமாம். என் அப்பா எப்போது இறந்தார் என்றால் 12.06.2021 ஆகும். SKR PACK Tech Private Limited என்ற நிறுவனத்தில் நானும் என் தகப்பனாரும் பங்குதாரராக இருந்தோம் என்றால் ஆமாம். என் அப்பா இறந்ததற்கு பின்பு நானும் என் தாயாரும் பங்குதாரராக உள்ளோம் என்றால் என் தாயார் பங்குதாரர் இல்லை. அவர் இடத்தின் உரிமையாளராக உள்ளார்.

8. SKR PACK Tech Private Limited என்ற நிறுவனத்திற்கு என் அப்பா இறந்த பின்பு நான் இயக்குநராகவும் இறந்துபோன என் தகப்பனாரின் காலியிடத்தில் என் தாயாரை நிரப்பியும் நிறுவன பதிவில் தடையில்லா சான்று பெற்றுள்ளேன் என்றால் என் மாமியாரைதான் காண்பித்து அந்த சான்று பெற்றுள்ளேன். என்னிடம் காட்டப்படும் சான்று SKR PACK Tech Private Limited என்ற நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்ட தடையில்லா சான்று என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் தடையில்லா சான்று நகல் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பி.வா.சா.ஆ 2 பதிவை 2007ம் ஆண்டிற்கு பின்பு புதுப்பித்தோமா என்றால் பதிவை புதுப்பிக்க வேண்டிய தேவையில்லை.

9. பி.வா.சா.ஆ 2 ஆவணம் இன்றுவரை நடைமுறையில் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அதை புதுப்பிக்க தேவையில்லை. வழக்கு சொத்து சம்மந்தமான வியாபாரத்திற்கு மத்திய விற்பனை வரி (GST) அனுமதி எண் பெற்றுள்ளேனா என்றால் வியாபாரம் தொடங்கிய பின்புதான் அதை வாங்கவேண்டும். வியாபாரம் தொடங்கவில்லை, எனவே வாங்கவில்லை. எனது எதிர்வழக்குரையில் முதல் விசாராணை வாக்குமூலத்திலும் பங்குதாரர் ஒப்பந்தம் செய்து அது நடைமுறைக்கு வரவில்லை என்று குறிப்பாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு நான் எனது எதிர்வழக்குரையில் முதல் விசாராணை வாக்குமூலத்திலும் பங்குதாரர் ஒப்பந்தம் செய்து அது நடைமுறைக்கு வரவில்லை என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.

10. தாவா சொத்தில் காலியிடமாக வாங்கி கட்டிடம் கட்டினோம் என்றால்

ஆமாம். பி.வா.சா.ஆ 6 ஆவணம் கட்டிட வரைபட அனுமதி என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ 6 எந்த அலுவலகத்தில் கட்டிட வரைபட அனுமதி கொடுக்கப்பட்டது என்பது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் industry of commerce ல் நானும் சதாசிவமும் நிறுவனத்தின் பெயரில் அனுமதி வேண்டி தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது. இன்றுவரை கட்டிட வரைபட அனுமதி வழங்கப்படவில்லை. பி.வா.சா.ஆ 6ல் இன்றுவரை கட்டிட வரைபட அனுமதி வழங்கப்படவில்லை என்றால் அதை சமர்ப்பித்து இன்றுவரை நிலுவையில் உள்ளது.

11. நான் சொல்வதுபோல் பி.வா.சா.ஆ 6 கட்டிட வரைபட அனுமதி இன்றுவரை வழங்கப்படவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. SKR PACK Tech Private Limited நிறுவனத்தில் வாதி சதாசிவம் ஒரு பங்குதாரர் என்றால் இல்லை. ஆனால் அந்த இடத்தை வாங்கும்போது நானும் வாதியும் சேர்ந்து ஒப்பந்தம் செய்து புல எண்.202/8, புல எண்.202/6, புல எண்.202/7ஐ வாங்கி அதற்கு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்து கொண்டோம். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 8 ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டதா என்றால் சான்றுறுதி அலுவலர் (Notary public) முன்னிலையில் கையெழுத்து பெறப்பட்டது. பி.வா.சா.ஆ 8 ஆவணம் பற்றி எனது எதிர்வழக்குரையிலும் முதல்நிலை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

12. வா.சா.ஆ 1 ஆவணத்தை வாங்கிய பின்பு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி நிறுவனத்தின் பெயருக்கு முறையாக மாற்றினோமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ 8 ஆவணத்திற்கு பிறகும் SKR PACK Tech Private Limited ல் வாதியும் அவரது வாரிசுகளும் பங்குதாரர்கள் இல்லை என்றால் பங்குதாரர்களாக இல்லை. அவர்களுக்கு அதில் உரிமை இல்லை. நெடுஞ்சாலையை அகலப்படுத்தும்போது வழக்கு சொத்தின் ஒரு பகுதியை ஆர்ஜிதம் செய்தார்கள் என்றால் ஆமாம். தலா 15 செண்ட் நிலத்தை புல எண்.202/6, 202/7 ல் ஆர்ஜிதம் செய்தார்கள். அது 202/6பி, 202/7பி என உட்பிரிவு செய்யப்பட்டது.

நில ஆர்ஜீதம் செய்யும்போது எங்களுக்கு அறிவிப்பு வந்ததா என்றால் ஆமாம். அது எங்களுக்கு வரவில்லை. எங்களுக்கு முந்தைய பட்டாதரர் பெயருக்கு கொடுக்கப்பட்டது. அந்த இடத்தில் இருந்த என்னிடம்தான் அந்த அறிவிப்பை கொடுத்தார்கள்.

13. அதற்கு நான் ஆட்சேபணை கொடுத்தேனா என்றால் நான் தனிப்பட்ட முறையில் ஆட்சேபணை கொடுத்தேன். அந்த ஆட்சேபணை நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. ஆனால் கைவசம் வைத்துள்ளேன். உட்பிரிவு செய்யப்பட்ட பின்பு வழக்கு சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் 2019 வரை பட்டா யார் பெயருக்கும் மாறவில்லை. அதன் பின்பு நான் முயற்சி செய்து என் பெயரிலும் சதாசிவம் பெயரிலும் கூட்டு பட்டா பெற்றுள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)